# அல் - ஜஸாஉ - 2

உள்ளே:-

★ குளிப்பின் வகைகள்.

★ இத்தா.

★ தயம்மும்.

★ ஹஜ்.

தொகுப்பாசிரியர் -

மௌலவி அல் ஹாஜ் A.L.M. நயீம் (பஹ்ஜி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

06 04 1999

சர்வ புகழும் அல்லாஹ்வுக்கே

அக்குறனை வராகஸ்ஹின்னை 366ம் இலக்க இல்லத்தில் வசித்து 26-2-1995 (ஹிஜ்ரி 1415 ரமழான் பிறை 25) அன்று காலஞ் சென்ற

# அப்துல் லதீfப்

அவர்களுக்கும் அன்னாரின் அன்பு மனைவியான 26. 2. 1999 (ஹிஜ்ரி 1419 துல்கஃதா பிறை 09) அன்று காலஞ் சென்ற

# சித்தி ஸைனப்

அவர்களுக்கும் நன்மை சேர்க்குமுகமாக அன்னார்களின் பிள்ளைகளால் அன்பளிப்புச் செய்யப்பட்டது

MOULAVI: NAYEEM
☎ 074-475271

**CHEAP SIDE**
05, DUNUWILA ROAD
AKURANA.
☎ 08-300053

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புரை

அல் ஹம்துலில்லாஹ் !

சர்வ புகழும் எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கே உரித்து. ஸலாத்தும் ஸலாமும் நபிகள்நாயகம் முஹம்மது(ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மீதும்,அன்னாரின் கிளையார்கள், தோழர்கள் மீதும் உன்டாவதாக. மணிதர்கள், மணித நேயம் படைத்தவர்களாக, அல்லாஹ்வின் திருப்தியைப் பெறக்கூடியவர்களாக வாழ்வதையே அல்லாஹு விரும்புகிறான். அந்த அல்லாஹு வினால் விடுக்கப்பட்ட கட்டளைகள் சரிவரப்பின்பற்றப்பட்டால் மட்டுமே அவனது பூரண திருப்தியைப் பெறமுடியும். எனவே மார்க்கச் சட்டங்களை நாம் தீர அறிந்து கொள்ளுதல் அவசியமானது.

காலத்தின் தேவைக்கேற்ப மக்கள் மார்க்க சட்டதிட்டங்களை சரிவர அறிந்துகொள்ள ஆலிம்களின் பங்களிப்பு தேவைப்படுகின்றது. இந்த வகையில் எமது சகோதரர் அல்ஹாஜ் மௌலவி ஏ.எல்.எம். நயீம் (பஹ்ஜி) அவர்கள். அல் ஜஸாஉ என்ற இச்சிறு நூலைத் தொகுத்துத் தமது பங்களிப்பை செலுத்தியுள்ளமை போற்றத்தக்கதாகும். எல்லாம்வல்ல அல்லாஹ் அவர்களது இப்பணியை ஏற்றுக்கோண்டு நற்கூலியைக் கொடுத்தருலள்வானாக.

சமகாலத்தின் தேவையையுணர்ந்து சில முக்கிய விடயங்களை மட்டும் இரத்தின்ச் சுருக்கமாக நூலாசிரியர் இன்நூலில் உள்ளடக்கியுள்ளார். இதனை வாசிக்கும் எவரும் குறிப்பாகப் பெண்கள் அதிகப்பயன் பெறுவார்கள் என்று கருதுகின்றேன். இது போன்ற நூல்களை நூலாசிரியர் தொடர்ந்தும். வெளியிட யா அல்லாஹ் நீயே அறுள் புரிவாயாக.

05.04.1999

மௌலவி:-
**M.I.M.** அப்துல் வாஹித் (பஹ்ஜி)
அதிபர்,
அல் பஹ்ஜதுல் இப்ராஹீமிய்யாஹ் அரபுக் கல்லூரி,
கோட்டை, காலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

சர்வ புகழும் எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கே உரித்து. ஸலாத்தும் ஸலாமும் நபிகள்நாயகம் முஹம்மது(ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மீதும்,அன்னாரின் கிளையார்கள், தோழர்கள் மீதும் உண்டாவதாக.

இஸ்லாமிய ஷரீஅத்தின் சகல அம்சங்களையும் கற்றுணர்ந்து செயற்படுவது ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும். இவ்வடிப்படையில் குளிப்பின் வகைகள், இத்தா, தயம்மும், ஹஜ் ஆகிய விடையங்களின் விதிமுறைகளை மக்கள் புரிந்து செயற்பட வேண்டுமென்பதற்காக இச்சிறு நூலைத் தொகுத்துள்ளேன்.

இந்நூல் மேற்கூறப்பட்ட நான்கு விடயங்களின் சகல அம்சங்களையும் பற்றிக்கூறாவிட்டாலும் நடைமுறைக்குத் தேவையான விடயங்கள் மட்டும் பொதிந்துள்ளன. அடியேனின் இத்தொகுப்பில் ஏதும் பிழைகளிருப்பின் அவற்றைப் பெருமனதோடு எனக்கு அறிவிப்பீர்களாயின் நான் நன்றியுடையவனாயிருப்பேன்.

கடந்த 26.02.1995 அன்று காலஞ்சென்ற எமது அன்புத்தந்தை அப்துல் லதீப் அவர்களினதும், 26.02.1999 அன்று காலஞ்சென்ற எமது அன்புத் தாய் சித்தி ஸைனப் அவர்களினதும் நினைவாக இந்நூலைத் தொகுத்து வெளியிடுகிறேன்.

இந்நூலுக்கு மதிப்புரை வழங்கிய மௌலவி எம்.ஐ.எம்.வாஹித் (பஹ்ஜி),அவர்களுக்கும். சரிபார்த்துதவிய அக்குறணை குருகொடை தாருல் உலூம் அல் மீஸானிய்யாஹ்வின் உஸ்தாத்மார்களுக்கும், இதனை அழகுற அச்சிட்டு வெளியிட உதவிய அக்குறணை ஒட்டோ பதிப்பகத்தாருக்கும் எனது இதயபூர்வமான நன்றிகள். இந்நூல் மூலம் பயனடையும் சகலருக்கும் அல்லாஹ் நல்லருள் புரிவானாக.- ஆமீன்.

176 தெமட்டகஸ்தென்னை,
அக்குறணை.

மௌலவி,அல்-ஹாஜ்
A.L.M. நயீம் (பஹ்ஜி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளிப்பின் வகைகள்.

ஒரு மனிதன் சதாவும் சுத்தமாயிருந்து அல்லாஹு" தஆலாவணங்குவதில் ஈடுபடவேண்டியது கடமை. இவ்வகையிலேயே இஸ்லாம் குளிப்பை அறிமுகப்படுத்தி அதனை பர்ழ், சுன்னத் என இரு வகையாகப் பிரித்து நோக்குகின்றது.

## பர்ழான குளிப்பை விதியாக்கும் கருமங்கள.

1. ஆண் பெண் உடலுறவு கொள்ளுதல். ஆணுறுப்பின் கத்னாவுக்குரிய பகுதி பெண்ணுறுப்பினுள் புகுந்து விட்டால் விந்து வெளிப்படாவிட்டாலும் குளிப்பு வாஜிபாகும்.

2. விழிப்பிலோ,உறக்கத்திலோ விந்து வெளியாகுதல்

3. மரணம் சம்பவித்தல்.

4. மாதாந்த ருது (ஹைழ்) வந்து நின்று விடுதல். ஒன்பது சந்திர வருடங்கள் பூரணமான பின்பே பெண்களுக்கு மாதாந்த ருது வரத் தொடங்கும். மாதாந்த ருது வந்து நிற்பதற்கு குறைந்தது ஒரு நாள். அதிக நீண்ட காலம் 15நாள். பெரும்பாலும் ஆறு அல்லது ஏழுநாட்கள். (சிலருக்கு முழு வாழ்நாளும் வராமலும் இருக்கலாம். இது அபூர்வம்).

5. பிரசவ ருது (நிபாஸ்) வந்து நின்று விடல். பிள்ளை பெற்ற பெண்களுக்கு பெற்றவுடன் இவ்விரத்தம் வரும். இதற்கு ஆகக் குறைந்த காலம் ஒரு வினாடி, ஆகக்கூடிய காலம் **60** நாட்கள். பெருவழக்கிலுள்ள காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40 நாட்கள். ஹைழ்,நிபாஸ், காலங்களில் தொழுதல், க.்.பாவைத் தவாப் செய்தல், குர்ஆனை தொடுதல், சுமத்தல், ஓதுதல், பள்ளியில் தரித்தல், பள்ளியினுள் பிரவேசித்தல், நோன்பு நோற்றல் கணவன் மனைவி சேர்க்கை செய்தல், மனைவியை தலாக் சொல்லுதல், தொடக்கை நீக்கும் நிய்யத்தோடு குளித்தல் ஆகிய கருமங்கள் ஹராமாகும். ஹைழ், நிபாஸ் நின்று விட்டால் குளிப்பதற்கு முன் நோன்பு நோற்றல், தலாக் சொல்லுதல், என்பன ஹலாலாகும். ஹைழ் நிபாசுடைய காலங்களில் விட்ட நோன்புகளைக் கழாச் செய்ய வேண்டும். தொழுகையைக் கழாச் செய்யத் தேவையில்லை.

ஒரு பர்ழான தொழுகைக்குரிய நேரம் வந்தபின் அத்தொழுகையை நிறைவேற்ற முன் ஹைழ் வந்து விட்டால் ஹைழ் நின்ற பின் அத்தொழுகையை கழாச் செய்வது கடமை யாகும். அவ்வாறே ஹைழ் நின்று விட்டதென உறுதியாகத் தெரிந்ததன் பின்னர் உடனடியாகக் குளித்துக் கொண்டு அவ்வேளைத் தொழுகையை நிறைவேற்றுவது கடமையாகும். ஹஜ்ஜுடைய காலத்தில் ஒரு பெண்ணுக்கு தவாபுல் இபாழா செய்ய முடியாமல் ஹைழ் வந்துகொண்டிருந்தால் ஹஜ்ஜை எவ்வாறு செய்து முடிப்பது என்ற கவலை பல பெண்களுக்கு ஏற்படுகிறது. இதற்கு ஹைழைத் தற்காலிகமாகத் தடை செய்யக்கூடிய மாத்திரைகளைப் பாவித்து ஹைழ் நின்றவுடன் கடமையான தவாபை சீக்கிரமாக செய்து கொண்டால் தவாப் நிறைவேறிவிடும். என இமாம்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.

## 6. பிள்ளை பெறுதல்.

முழுக்கை விதியாக்கும் 6 கருமங்களில் முந்திய மூன்றும் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானவை. பிந்திய மூன்றும் பெண்களுக்கு மட்டும் விஷேடமானவை.

உடலுறவு கொள்ளுதல்,விந்து வெளியாதல்,ஹைழ்,நிபாஸ் தோன்றி நின்று விடுதல் என்பன ஏற்பட்டால் குளிப்பதற்கு முன் உண்ணல்,குடித்தல்,உறங்குதல் முதலியன மக்ரூ.் ஆகும். ஆனால் அபத்தைக் கழுவி வுழூ.்.ச்செய்து கொண்டால் மக்ரூ.் இல்லை. குர்ஆன் ஓதுவதைத் தவிர திக்ரு செய்தல் பிரார்த்தனை (துஆ) செய்தல் சலவாத்துச் சொல்லல் சமைத்தல் பிறருடன் இருந்து உண்ணல்,வீட்டு வேலைகளில் ஈடுபடுதல் தடை செய்யப்படாதவைகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதி, வதி, என இரு வகை உண்டு. அதில் மதி என்பது மனைவியுடன் உடலுறவு கொள்ள முன்னும், இச்சை அதிகரித்த சமயத்திலும் வெளிப்படக்கூடிய பசைத்தன்மையான திரவம்.

வதி என்பது சிறுநீர் கழித்த பின் வெளியாகக் கூடிய ஒரு வகையான திரவம். இவ்விரண்டின் மூலமாகவும் குளிப்பு கடமையாகாது. என்றாலும் இவை இரண்டும் நஜீஸ் என்றபடியால் இது பட்ட இடங்களைக் கழுவுவதும்,வுழுச் செய்வதும் அவசியமாகும்.

## ஸுன்னத்தான சில குளிப்புகள்.

இஸ்லாம் அசுத்தத்தையும், துர்வாடையையும் வெறுக்கிறது. விசேடமாக மற்றவர்களுடன் சேர்ந்திருக்கும் சந்தர்ப்பங்களில் குளித்து, மணம் பூசி மற்றவர்களுக்கு இதமான சூழலை உருவாக்கும்படி உற்சாகமூட்டுகிறது. அல்லாஹுதஆலாவிடம் இறைஞ்சும் போது சுத்தம் வலியுறுத்தப்படுகிறது. எனவே கீழ்க் குறிப்பிடப்படும் சந்தர்ப்பங்களில் குளித்தல் ஸுன்னத்தாகும்.

### 1. ஜும்ஆவுடைய குளிப்பு:-

ஜும்ஆத் தொழுகைக்குச் செல்கின்றவர் அன்று ஸுப்ஹுத் தொழுகை நேரம் முதல் ளுஹர் நேரம் வரை குளிக்கலாம். எனினும் பள்ளிக்குச் செல்வதற்கு சற்று முன்னர் குளித்துக் கொள்வதே சிறந்ததாகும்

### 2. இரு பெருநாள் குளிப்பு:-

நோன்புப்பெருநாள், ஹஜ்ஜுப் பெருநாள் ஆகிய இரு தினங்களிலும் நடு இரவிலிருந்து அன்று சூரியன் அஸ்தமிக்கும் வரையுள்ள நேரத்தில் சிறுவர் பெரியோர் ஆண் பெண் முதலான அனைவரும் குளித்தல் ஸுன்னத்தாகும். ஹைழ்,நிபாஸ் காலங்களிலுள்ள பெண்களுக்கும் இக்குளிப்பு ஸுன்னத்தாகும்.

### 3. ஹஜ்ஜுடைய குளிப்பு:-

ஹஜ்ஜுக்கோ உம்ராவுக்கோ நிய்யத் வைப்பதற்காகவும் அரபாவில் தரிப்பதற்காகவும் முஸ்தலிபாவில் தரிப்பதற்காகவும், தஷ்ரீக்குடைய நாட்களில் ஜம்ராக்களில் கல் எறிவதற்காகவும் கஃ. பாவைத் தவாப் செவதற்காகவும் தனித்தனியாகக் குளித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மயக்கமோ, பைத்தியமோ ஏற்பட்டு சுய அறிவை இழந்த வர்கள் சுய அறிவைப் பெற்ற பின் குளித்தல்.

5. மையித்தைக் குளிப்பாட்டியவர்கள் குளித்தல்.

6. பள்ளியில் இ.்.திகாப் இருக்கக் குளித்தல்.

7. மக்காவிலோ,மதினாவிலோ நுழைவதற்காகக் குளித்தல்.

8. காபிர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பின் குளித்தல்.

காபிராக இருக்கும் காலத்தில் குளிப்பை வாஜிபாக்கக் கூடிய கருமமொன்று ஏற்பட்டிருந்தால் இஸ்லாதத்தை ஏற்றுக் கொண்டபின் குளித்தல் கடமையாகும். ஒருவர் பர்ழான குளிப்பையும் ஸுன்னத்தான குளிப்பையும் ஒன்றாகச் சேர்த்து நிறைவேற்ற விரும்பினால் தலையில் நீரூற்றும் போது இரண்டையும் நிய்யத் வைக்க வேண்டும். ஒன்றை மட்டும் நிய்யத் வைத்தால் மற்றது நிறைவேறாது.ஆரம்பத்தில் பர்ழான குளிப்பை நிய்யத் வைத்துவிட்டு பிறகு ஸுன்னத்தான குளிப்பை நிய்யத் வைத்தால் இரண்டும் பூரணமாக நிறைவேறிவிடும்.

## குளிக்கும் முறை:-

குளிப்பதற்கு முன் சிறுநீர் கழித்துக் கொள்ள வேண்டும். பின் உடம்பிலுள்ள அசுத்தங்களை நீக்கிக் கழுவிக் கொள்ள வேண்டும். மர்மஸ்தலத்தையும் சுத்தம் செய்ய வேண்டும். பின் தொழுகைக்காக வுழூ செய்வது போன்று வுழூ செய்ய வேண்டும். பிறகு முழுக்கின் பர்ழை நிறை வேற்றுகிறேன் என மனதில் நிய்யத்து வைத்துக் கொண்டு தலையில் நீரை ஊற்ற வேண்டும். அல்லது நீரினுள் மூழ்க வேண்டும்.சுன்னத்தான குளித்தலாயின் குறிக்கப்பட்ட சுன்னத்தான குளிப்பை நிறைவேற்றுகிறேன் என மனதில் நிய்யத் வைத்துக் கொண்டு தலையில் நீரை ஊற்ற வேண்டும். உதாரணமாக ஜும்ஆ வுடைய சுன்னத்தான குளிப்பை நிறைவேற்றுகிறேன் என நிய்யத் வைத்துத் தலையில் நீரை ஊற்ற வேண்டும். பின்னர் உடலில் வலப்பக்கத்திலும் அடுத்து இடப்பக்கத்திலும் மும்மூன்று முறை நீர் ஊற்றிக் கழுவ வேண்டும். நீரூற்றிய பின் உடல்முழுவதையும் கையால் நன்றாகத் தடவித் தேய்ப்பதும், முடிகளைக் குடைந்து கழுவுவதும் சுன்னத்தாகும்.

மேனியின் எப்பகுதியும் விடுபடாது உரோமங்கள் உட்பட சகல பகுதிகளையும் கழுவுவது கடமையாகும்.ஒரு மயிரளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுபட்டாலும் குளிப்பு நிறைவேறாது.

குளித்து முடிந்த பின் கழுவப்படாத பகுதி தெரியவந்தால் அவ்விடத்தை மட்டும் கழுவிக் கொள்ளுதல் போதுமானதாகும். வாஜிபான குளிப்பை நிறைவேற்றிக்கொள்ளவே முடியாமல் அதிகமானோருக்கு சுப்ஹ் தொழுகை தவறி விடுகிறது. விசேடமாகப் புதுமணத்தம்பதியினர் சுப்ஹ் தொழுகையைப் பற்றி எண்ணிப்பார்ப்பதே இல்லை இஸ்லாத்தில் சொல்லப்பட்ட குளிப்பு முறையை நாம் பின்பற்றாமல் எமது வழமையான குளிப்பை மனதில் ஏற்படுத்திக் கொண்டதே இதற்கான காரணம்.

வாஜிபான குளிப்பை சுருக்கமாக ஒரு கேத்தல் நீரால் நிறைவேற்ற நாம் பழகிக் கொள்ள வேண்டும். இளஞ் சுடுநீரை ஒரு கேத்தலுக்கு எடுத்து அதைத் தலைப்பக்கமாக ஊற்றி மேனி முழுவதும் நன்றாகத் தேய்த்துக் கொண்டால் குளிப்பு நிறைவேறி விடும். சுபஹூத் தொழுகையையும் நிறைவேற்றிக்கொள்ளலாம்.

ஹைழ் நின்ற பின் குளிக்கும் போது கஸ்தூரி போன்ற ஆகுமான வாசனைத் திரவியங்களால் இரத்தம் வெளியான இடத்தில் தேய்த்துக் கழுவுதல் ஸுன்னத்தாகும். மணச் சவர்க்காரமும் போதுமானதாகும்.

மேற்கூறப்பட்ட குளிப்பு முறை பர்ழான ஸுன்னத்தான இரு குளிப்பு முறைகளுக்கும் பொதுவானதாகும். ஹைழ்,நிபாஸ் வெளியாகி நின்றபின் குளிப்பதற்கு முன்னும் ஜனாபத் உண்டாகி குளிப்பதற்கு முன்னும் உடலிலிருந்து முடி, நகம் போன்றவற்றை அகற்றுவது நல்லதல்ல. மேற்கூறப்பட்ட குளிப்பு முறைகளில் பர்ழுகள் இரண்டு, ஏனையவை ஸுன்னத்தாகும். பர்ழான குளிப்பை போன்றுதான் மையித்தை குளிப்பாட்டுவதும்.

## முழுக்கின் பர்ழுகள்:-

1. நிய்யத் வைத்தல் (உடலில் தண்ணீர் படும்போது முழுக்கின் பர்ழை நிறைவேற்றுகிறேன் என்று நாடிக்கொள்ளல்.)
2. உடல் முழுவதையும் கழுவுதல், காதுகளின் உள்மடிப்புகள் தொப்புள்,கண்மடல்கள், ஒரு பெண் குந்தினால் மர்மஸ்தலத்தில் வெளிப்படக்கூடிய பகுதி முதலியவற்றைக் கழுவுதல் கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தயம்மும்

இஸ்லாத்தின் ஐம் பெரும் கடமைகளில் தொழுகை கலிமாவுக்கு அடுத்ததாகும். தொழுகை இன்றி ஒருவன் சம்பூரண முஸ்லிமாக இருக்க முடியாது. மண்ணறையிலும் முதலில் விசாரிக்கப்படுவது தொழுகையைப் பற்றித்தான். ஆகவே தொழுகையை எச்சந்தர்ப்பத்திலும் விடுவதற்கு அனுமதி இல்லை. தண்ணீர் இல்லாத பிரயாணத்திலோ, நோயுற்ற நிலையிலோ, தண்ணீரை உடம்பில் பயன்படுத்த முடியாத வேளையிலோ, இருக்கின்ற தண்ணீர் குடிப்பதற்கு மட்டும் தான் போதும் என்ற நிலையிலோ, தொழுகையை விட்டுவிட்டிருக்க இஸ்லாத்தில் அனுமதி இல்லை. அது சுப்ஹு தொழுகையானாலும் சரி.

தொழுகையின் முக்கியத்துவத்துக்கேற்ப அதை அனுஷ்டிப்பதையும் அல்லாஹ் இலகுவாக்கியுள்ளான். பிரயாணம் செய்யும் போது கஸ்ரு ஜம்உ, செய்து தொழுவதற்கு சலுகையளித்த இஸ்லாம். தண்ணீர் இல்லாத சந்தர்ப்பத்தில் தயம்மும் செய்து தொழும்படியும் ஏவியுள்ளது. தயம்மும் என்றால் குளிப்பதற்கோ, வுழூச் செய்வதற்கோ, வாய்ப்பில்லாத போது அவைகளுக்குப் பதிலாக "பர்ழான தொழுகையை ஆகுமாக்கத் தேடுகிறேன்" என்ற நிய்யத்துடன் புழுதியுள்ள மண்ணில் ஒரு முறை கையை வைத்து முகத்தையும், மறுமுறை கையை வைத்து முழங்கை உட்பட இரு கைகளையும் தடவிக் கொள்ளுதலாகும்.

## தயம்மும் செய்ய மூன்று காரணங்கள் உண்டு.

1. தண்ணீரைப் பெற்றுக் கொள்ள முடியாதிருத்தல்.
2. தன்னிடம் உள்ள நீரை வுழூச் செய்யப் பாவித்தால் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் போகும் என்ற நிலை.
3. நோய் பற்றிய அபாயம். தண்ணீரையோ வெந்நீரையோ பாவித்தால் உயிருக்கு அல்லது உறுப்புகளுக்கு ஆபத்து வரும் அல்லது நோய் குணமடையத் தாமதம் ஏற்படுமென்று நம்பிக்கையான வைத்தியர் தெரிவித்தால் அல்லது உறுதியாக அறிந்திருந்தால் தயம்மும் செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்திருந்தால் தயம்மும் செய்யலாம்.

## தயம்மும் செய்யும் முறை

உடம்பில் ஏதாவது நஜீஸ் இருந்தால் அதைக் கட்டாயம் முதலில் அகற்றிவிட வேண்டும். மா,சுண்ணாம்பு போன்ற பொருட்களோ, நஜீஸோ கலக்காத புழுதியுள்ள மண்ணை எடுக்க வேண்டும். தொழுகையின் நேரம் வந்த பின்னே தயம்மும் செய்ய ஆரம்பிக்கவேண்டும். கையில் கடிகாரமோ, மோதிரமோ இருந்தால் அதனை அகற்றிவிட வேண்டும்.

விரல்களை விரித்துக் கொண்டு அஊது பிஸ்மில் சொல்லி **"பர்ளான தொழுகையை ஆகுமாக்கத்தேடுகிறேன்"** என்ற நிய்யத்துடன் உட்கைகளை மண்ணில் அடிக்க வேண்டும். கையைத் தூக்கி இரு புறங்கைகளையும் கொஞ்சம் தட்டிக் கொண்டு முகம் முழுவதையும் நன்றாக ஒரு முறை உள்ளங்கையால் தடவ வேண்டும். முகத்தில் கையை வைக்கும்போது முன்சொன்ன நிய்யத்தை மறந்து விடக்கூடாது. எனவே மண்ணில் கையை வைக்கும் போதும் முகத்தில் கையை வைக்கும் போதும் நிய்யத்து இருத்தல் அவசியம். பின்னர் இரு கைகளையும் விரித்தவாறே அதே மண்ணில் அடிக்க வேண்டும்.பின் இடது கையால் வலது கையை முழங்கை உட்பட ஒரு முறை தடவ வேண்டும். வலதுகை மணிக்கட்டின் உட்பாகத்தை அப்போது துடைப்பதில்லை. பின் வலது கையால் இடது கை முழங்கை உட்பட ஒரு முறை தடவ வேண்டும். முகம், கைகளில் ஒரு இடமும் விடுபடாமல் தடவிக் கொள்ளல் கடமையாகும்.

## தயம்முமின் ஷர்ததுகள்.

1. உடலில் நஜீஸ் இல்லாதிருத்தல்
2. குறிப்பிட்ட தொழுகையின் நேரம் வந்திருத்தல்.
3. தயம்மும் செய்யும் பொருள் மண்ணாக இருத்தல்.
4. அதில் புழுதியிருத்தல்
5. மண் சுத்தமாயிருத்தல்.
6. தண்ணீரைப் புழங்க முடியாதிருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தயம்முமின் பர்ழுகள்.

1- பர்ழான தொழுகையை ஆகுமாக்கத் தேடுகிறேன் என நிய்யத்து வைத்தல்.

2-3 மண்ணை நாடி எடுத்தல்

4- முகத்தை சம்பூரணமாகத் தடவுதல்.

5- இரு கைகளையும் முழங்கையுட்படத் தடவுதல்.

6- ஒழுங்கு முறையாகச் செய்தல்.

7- ஒரு முறை முகத்துக்கும் மறுமுறை கைகளுக்குமாக இரு முறை மண்ணில் கைகளை அடித்தெடுத்தல்.

ஒரு தயம்முமைக் கொண்டு எத்தனை ஸுன்னத்தான தொழுகை களையும் ஜனாஸாத் தொழுகையையும் தொழலாம். குர்ஆனைத் தொடலாம்,ஓதலாம்,சுமக்கலாம்,ஒரு பர்ளுத் தொழுகையை ஒரு முறை மாத்திரமே ஒரு தயம்முமால் செய்ய முடியும்.

# இத்தா.

இத்தா என்பது ஒரு பெண் தன் கர்ப்பத்தைப் பரிசோதிப் பதற்கும், துக்கம் அனுஷ்டிப்பதற்குமுரிய காலமாகும். அல்லது அல்லாஹ்வின் கட்டளையாகும். இத்தா 2 வகைப் படும்:

1. தலாக்குடைய இத்தா
2. வபாத்துடைய இத்தா

## தலாக்குடைய இத்தா.

ஒரு பெண்ணைத் திருமணம் செய்து அவளுடன் உடலுறவு கொள்ள முன் அவள் தலாக் சொல்லப்பட்டால் அவள் மீது இத்தா என்றொன்றில்லை. தலாக் சொல்லப்பட்ட பெண் கற்பவதியாக இருந்தால், பிள்ளை பெற்றதுடன் இத்தாவுடைய காலம் முடிவடைந்து விடும். மாதாந்த ருது வரக்கூடியவளாக இருந்தால் மூன்று (3) துப்புரவுடைய காலம் இத்தா இருக்க வேண்டும். அல்லது வயது சென்றகாரணத்தால் மாதாந்த ருது வராத பெண்ணாக இருந்தால் 3மாதம் இத்தா இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வபாத்துடைய இத்தா.

கணவனை இழந்த பெண்ணுக்கு 4மாதம் 10நாட்கள் இத்தாவுடைய காலமாகும். கணவன் மௌத்தாகும் போது மனைவி கற்பிணியாக இருந்தால் பிள்ளைப் பேறு வரை இத்தா இருத்தல் வேண்டும். கணவன் இறந்த மறுநாளே குழந்தை பிறந்துவிட்டால் அன்றுடன் இத்தாவுடைய காலம் முடிவடைந்துவிடும்.

ஒரு பெண்ணுக்கு தன் கணவன் இறந்த செய்தி உதாரணத்திற்கு ஒரு மாதத்திற்குப் பின் தெரிய வந்தால் மீதமுள்ள நாட்களுக்கு மட்டும் இத்தா இருந்தால் போதுமானதாகும்.

இத்தா அனுஷ்டிக்கும் பெண் உணவுக்கு வழியில்லாத பரம ஏழையாக இருந்து அவளுக்கு உதவி செய்ய ஒருவரும் முன்வராதும் இருந்தால் பகலில் மார்க்க நெறிப்படி வெளியில் சென்று வாழ்க்கைக்கு அவசியமானவற்றைத் தேடிக்கொண்டு மாலையில் வீடு திரும்பி விட அனுமதியுண்டு.

வபாத்துடைய இத்தா அனுஷ்டிக்கும் பெண் வயதில் முதிர்ந்தவளாயினும் வயதில் சிறியவளாயினும் ஆடை அலங்காரம் செய்து கொள்வதும், ஆபரணங்கள் அணிவதும்,மணம் பூசுவதும் தடுக்கப்பட்டுள்ளன.

நிகாஹ் முடிவடைந்து கணவன் இறந்து விட்டால் உடலுறவு கொண்டாலும் சரி உடலுறவு கொள்ளாவிட்டாலும் சரி இத்தா இருந்தேயாக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹஜ்ஜும் ஹாஜிகளும்

************

**ஹஜ்** இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றாகும். (ஐந்தாவது கடமையாகும்). இமாம்களின் மிகச் சரியான கருத்தின் படி இது ஹிஜ்ரி ஆறாம் ஆண்டு கடமையாக்கப்பட்டது. இக்கடமையை நிறைவேற்ற உடலாலும்,செல்வத்தாலும் சக்தி பெற்ற ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் இது கடமையென்பது அல்குர்ஆனின் வசனங்கள் மூலமும்,அண்ணல் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் ஹதீஸ்கள் மூலமும் தெளிவாகின்றது.

இன்னும் அல்லாஹ்வுக்காக அவ்வீட்டை ஹஜ்ஜு செய்தல் மனிதர்களின் மீது - அதன் பால் போகவரச் சக்தி பெற்றவரின் மீது கடமையாக உள்ளது (3:97) ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் இஸ்லாம் என்றால் என்னவென வினவப்பட்ட போது அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குத் தகுதியானவன் வேறு யாருமில்லை, முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அல்லாஹ்வுடைய திருத்தூதர்என சாட்சி கூறுவதும், தொழுகையைக் கடைப்பிடிப்பதும், ஸகாத் கொடுப்பதும்,ரமழான் மாதம் நோன்பு நோற்பதும், சக்தியிருப்பின் ஹஜ் செய்வதுமாகும் என்று பதிலுரைத்தார்கள்.

திராணிபெற்ற ஒரு முஸ்லிம் தன் ஆயுளில் ஒரு தடவை இக் கடமையை நிறைவேற்றுவது கடமை (பர்ழ்) ஆகும். இதன் பின் தனக்குவசதியான சந்தர்ப்பங்கள் கிடைக்கும் போது இப்புனிதக் கடமையை நிறைவேற்றுவது ஸுன்னத் ஆகும். நபி இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாத்து வஸல்லம்) அல்லாஹ்வின் ஆணையை ஏற்று மக்களை ஹஜ்ஜுக்காக அழைப்பு விடுத்தது முதல் இற்றை வரை உலகின் எண் திசைகளிலிருந்தும் மக்கள் சாரி,சாரியாக புனித க:. பதுல்லாஹ்வைத் தரிசித்தே வருகின்றனர். மொழியினால், நிறத்தினால், மண்ணினால் வேறுபட்டிருந்தாலும் நாம் அனைவரும் அல்லாஹ்வை ஓரே ரப்பாக ஏற்றுக் கொண்ட அவனது அடிமைகள், நாம் அனைவரும் சகோதரர்கள் எனும் உணர்வோடு அங்கே கூடி நிற்கும் முஸ்லிம்களின் காட்சி இஸ்லாமிய சகோதரத்துவத்தை முழு உலகிற்கும் பறைசாற்றுகின்றது. உண்மையில் இது ஓர் இஸ்லாமிய சகோதரத்துவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநாடாகவே விளங்குகின்றது. இப்புனித மிகு கடமையை நிறைவேற்றச் செல்லும் ஹாஜிகள் கடைப்பிடிக் கவேண்டிய ஒழுக்க மாண்புகள் , இக்கடமையின் விதிமுறைகள் பற்றி விளக்குவதே இச்சிறு நூலின் நோக்கமாகும்.

கண்ணியமிக்க ஹாஜிகளே! தற்போது நீங்கள் ஒரு புனிதமான கடமையை நிறைவேற்றுவான் வேண்டி தயாராகிக் கொண்டிருக்கிறீர்கள். எனவே நீங்கள் அல்லாஹ்வுடைய சிறப்பு விருந்தாளிகளாக மாறிவிடுகின்றீர்கள். நீங்கள் ஹஜ்ஜுக்குப் புறப்படு முன்னர் உற்றார், உறவினர்கள், அயலவர்கள் அனைவரும் உங்களைப் புனித சீலர்களாக எண்ணி சகல மரியாதைகளையும் உங்களுக்கு நல்குகின்றனர். இதனால் நீங்களும் உங்களை மறந்து தியாக உணர்வால் ஆட்கொள்ளப்பட்டு விடுகின்றீர்கள் உண்மையில் இவ்வாறுதான் ஓர் உண்மையான ஹாஜியின் நிலைப்பாடு அமைய வேண்டும். அவ்வுணர்வு ஹஜ்ஜுப் பயணம் முடிவதோடு முற்றுப்பெற்று விடாது மரணம் வரையும் நீடித்திருக்க வேண்டும். விசேடமாக பயணத்துக்கு முன்னரும், பயணத்திலும், அதற்குப் பின்னரும் மௌத்து வரையும் தூய எண்ணத்தை (இ.ஃ.க்லாஸ்) எல்லா நடவடிக்கைகளிலும் கடைப்பிடிக்கத் தவறக் கூடாது.

சங்கைகுரிய ஹாஜிகளே! இப்பயணத்தில் ஆரம்பம் முதல் இறுதி வரை ஓர் ஆலிமின் வழிகாட்டல் இன்றியமையாததாகும். ஹஜ்ஜுடைய அமல்களில் இடம்பெறும் இஹ்ராம்,தவாப்,ஸ.ஃ.ய்,ரம்ய் (கல்லெறிதல்),அரபாவில் தரித்தல்,மினாவில் தங்குதல், முஸ்தலிபாவில் தரித்தல் ஆகிய அம்சங்களில் பல ஷர்த்துகள், பர்ழுகள், வாஜிபுகள், ஸுன்னத்கள் உள்ளன. இன்னும் இவைகளை நிறைவேற்றும் போது ஸுன்னத்தான துஆக்களும் பல உள்ளன. இவைகளை நீங்கள் படித்தும், மனனமிட்டுமிருப்பீர்கள். எனினும், ஹஜ்ஜை நிறைவேற்றும் பொழுது பல சந்தேகங்கள் உள்ளங்களில் எழும். இச்சந்தர்ப்பத்தில் ஓர் ஆலிம் உங்களோடிருப்பது அவசியமே. சில வேளை சன நெரிசலில் ஆலிம்களை விட்டும் நீங்கள் பிரிந்து விடும் சந்தர்ப்பமும் ஏற்படும். இச்சந்தர்ப்பத்தில் எவ்வாறு அக்கடமையை நிறைவேற்ற வேண்டுமென்பதையும் ஓர் ஆலிமிடம் கேட்டுத் தெரிந்து வைத்திருப்பது கட்டாயமாகும்.

அன்பின் ஹாஜிகளே! ஆரம்பமாக தேக ஆரோக்கிய மிருப்பின் குளிப்பதற்கு வசதியுமிருப்பின் குளித்துக் கொள்ளுங்கள் உடம்பில் மாத்திரம் வாசனைத்திரவியங்களைப் பூசிக்கொள்ளுங்கள். இதன் பின் இஹ்ராமுடைய ஆடைகளையணிந்து கொள்ளுங்கள். பின் இஹ்ராமுடைய ஸுன்னத்தான இரு ரக்அத்களைக் கொண்ட-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழுகையை நிறைவேற்றுங்கள். இலங்கையர்களாகிய நாம் தமத்து முறையைத் தழுவி இஹ்ராம் ஆடைகளை அணிந்து கொள்வதால் அவைகளை அணியும்போது உம்ராவுக்காக நிய்யத் வைத்துக் கொள்ளுங்கள். இதன் பின் உங்கள் இல்லங்களிலிருந்து விமான நிலையம் நோக்கிப் புறப்படுகின்றீர்கள். இவ்வேளை உற்றார், உறவினர் பலரை அழைத்துக் கொண்டு விமான நிலையம் நோக்கிச் செல்வது பல அசௌகரியங்களையும் இஸ்லாமிய ஷரீஅத்திற்கு முரணான செயற்பாடுகளையும் ஏற்படுத்துவதனால் இதனை முற்றாகத் தவிர்ப்பதே சாலச் சிறந்ததாகும்.

பிரயாணத்தின் போது உணவுப் பதார்த்தங்கள் எதையேனும் கைவசம் எடுத்துக் கொள்ளுங்கள். பயணத்திலும் சகல நேரங்களிலும் வுழூவுடன் இருந்து கொள்ள முயற்சியுங்கள். திக்ர், ஸலவாத் போன்ற அமல்களை அதிகம் செய்வதோடு துஆ இறைஞ்சுவதிலும், தல்பியா ஓதுவதிலும் அதிகநேரத்தைச் செலவிடுங்கள். நாம் எமது வீடுகளிலும், ஏனைய இடங்களிலும் ஒரு சிலருடன் சௌகரியமாக வாழ்ந்ததைப் போல இப்பிரயாணத்தில் நடந்து கொள்ள முடியாது. அசௌகரியங்களும் ஏற்படத்தான் செய்யும். எனவே பொறுமை இன்றியமையாத தொன்றாகும். விமானத்தில் ஏறும் போதும்,இறங்கும் போதும் ஒருவரை யொருவர் தள்ளிக் கொண்டும், முண்டியடித்துக் கொண்டும் செல்லாதீர்கள். இப்பயணத்தில் தனது நலனை மாத்திரம் கருத்திற் கொள்ளாது பிறர் நலனையும் கருத்திற் கொண்டு செயற்பட வேண்டும். ஏற்படும் கஷ்டங்களிலும், அசௌகரியங்களிலும் எல்லோரும் சமபங்கை ஏற்றுக் கொள்வதே சிறந்த முறையாகும்.

தற்போது விமானத்தில் சென்று கொண்டிருக்கின்றீர்கள், விமானத்தில் புகைத்தலைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும், தண்ணீரைச் சிக்கனமாகப் பாவித்துக் கொள்ள வேண்டும், வாத்திய இசை ஒலிபரப்பப்பட்டால் அதற்குக் காதுதாழ்த்தாது திக்ர்,ஸலவாத், தல்பியா,துஆ போன்ற அமல்களில் ஈடுபட வேண்டும். தற்பொழுது நீங்கள் சவூதி விமான நிலையத்தை அடைந்து விட்டீர்கள். அங்கே எமக்கோர் அசௌகரியமான நிலை ஏற்படும், பயணக் களைப்பு,கால நிலை மாற்றம், உணவுகளில் மாற்றம், உள்ளத்தில் ஒரு வகை சோர்வுணர்வு போன்றவை ஏற்படும். இக்கட்டத்தில் நாம் பொறுமையோடு இருந்து கொள்ள வேண்டும். எமது கோபவுணர்வை மற்றவர் மீது காட்டி விடக் கூடாது. இங்கிருந்து புனித மக்கா செல்வதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ் வண்டியைப் பெறும் முயற்சிகளில் எமது முகவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள். எமது கடவுச்சீட்டுகளை ஒப்படைத்து தேவையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள சில மணித்தியாலங்கள் காத்து நிற்க வேண்டியதேற்படும். இவ்வேளை பசியும் எம்மை ஆட்கொள்ளும். இந்நிலையை அறியாத பல ஹாஜிகள் அழைத்து வந்த முகவர்களைத் திட்டுவதற்கும், தகாத வார்த்தைகளை அவர்கள் மீது பிரயோகிப்பதற்கும் ஆரம்பித்து விடுவர். ஒருவர் முதலில் ஆரம்பிப்பார். படிப்படியாக அவரோடு பலர் இணைந்து கொள்வர். இறுதியாக சகல பாவங்களும் இதனைத் துவக்கி வைத்தவரின் பொறுப்பிலாகி விடும். எனவே, இவ்விடயத்தில் நாம் ஒவ்வொருவரும் விழிப்புணர்வோடு செயற்பட வேண்டும்.

அன்றோ அல்லது மறுதினமோ புனித மக்காவை பஸ் மூலம் சென்றடைந்து விடுவீர்கள். இது சுமார் ஒரு மணித்தியாலப் பயணமாகும். மக்காவையடைந்த பின் முகவர்கள் உங்களுக்குரிய தங்குமிடத்தைக் காட்டித் தருவார்கள். அங்கே உங்களது பொருட்களை வைத்து விட்டு உம்ராவுடைய அமல்களை நிறைவேற்றத் தயாராகி விட வேண்டும். முதலாவது க.்.பத்துல்லாஹ்வை தவாப் செய்து, விட்டு பின்னர் ஸபா, மர்வாவுக்கிடையில் ஸ.்.யும் செய்து, ஹல்கு (தலைமுடியை நீக்குதலும்) செய்து கொண்டால் உம்ரா நிறைவேறி விடும்.இதன் பின் இஹ்ராமுடைய உடைகளைக் களைந்து எமது வழமையான ஆடைகளையணிந்து கொண்டு தவாப் உட்பட எல்லா அமல்களையும் செய்யலாம்.

பேரன்பிற்குரிய ஹாஜிகளே! இவ்வேளையிற் தான் நாம் பொறுப்புணர்வோடு நடந்து கொள்ள வேண்டும். புனிதமானதோர் இபாதத்தை நிறைவேற்ற வந்துள்ள பல ஹாஜிகள் தமது மகோன்னத நோக்கத்தை மறந்து, வீட்டிலிருந்து புறப்படும் போதிருந்த தக்வா, இக்லாஸ் ஆகியவற்றையுமிழந்து தொழிற்பட ஆரம்பித்து விடுகின்றனர். ஆகவே உங்களின் பெறுமதியான நேரங்களை வீணாகக் கழிக்க வேண்டாம். அங்கு நீங்கள் செய்யும் அமல்களில் தவாபையும், உம்ராவையும் அதிகமாகச் செய்து கொள்ளுங்கள்.மக்காவில் நிலை கொண்டுள்ள அல்மஸ்ஜிதுல் ஹராமும், மதீனாவில் நிலைகொண்டுள்ள அல்மஸ்ஜிதுந்நபவியும் அதிக நன்மைகளைத் தரவல்லன. எனவே, அதிகமான நேரங்களை இ.்.திகாபுடைய நிய்யத்துடன் மஸ்ஜித்களில் அமல் செய்வதிலேயே கழிப்பதற்கு பிரயத்தனம் செய்யுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பின் முகவர்களே! நீங்கள் அழைத்துச் சென்றுள்ள ஹாஜிகள் விடயத்தில் பொறுப்புணர்வோடு நடந்து கொள்ளுங்கள். ஹஜ்ஜைப் பூரணமாகவும், திருப்திகரமாகவும் செய்து முடிப்பதற்குத் தேவையான வசதிவாய்ப்புக்கள் அனைத்தையும் அவர்களுக்கு பெற்றுக் கொடுக்கத் தவறாதீர்கள். ஹஜ், உம்ராவுடைய கிரியைகள் சம்பந்தமான தெளிவுரைகளை அடிக்கடி அவர்களுக்கு வழங்கிக் கொண்டேயிருங்கள். ஹஜ்ஜுக்காக பெண்களை தங்களது பொறுப்பின் கீழ் அழைத்துச் செல்லும் ஆண்கள் அப் பெண்கள் இஸ்லாமிய வரையறைகளை மீறாது கவனித்துக் கொள்ள வேண்டும். ஆண்களும், பெண்களும் உல்லாசப் பயணிகளைப் போன்று ஓரே இடத்தில் ஒன்றாக நடமாடுவதும், ஆண்களுக்கு மத்தியில் அந்நிய பெண்கள் எவ்வித நாணமுமின்றி இரவு நேர ஆடைகளோடு நடமாடுவதும், ஆண்களின் உணர்ச்சிகளைத் தூண்டிவிடுமமைப்பில் இளம் வயதுப் பெண்கள் உலா வருவதும், விசனத்துக்குரிய விடயங்களாகும்.

எனவே நாம் இவ்விடயத்தில் மிகவும் ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். குளிக்கப் போய் சேற்றைப் பூசிக் கொண்டதைப் போன்று எமது ஹஜ்ஜுப் பயணமும் ஆகிவிடக் கூடாது. ஹாஜிகள் தங்குமிடங்களில் ஆண்,பெண் கலப்பற்ற முறையில் தங்குவதற்கு வசதி செய்து கொடுப்பது முகவர்களின் பொறுப்பாகும். பெண்கள் தமது அறைகளிலிருந்து வெளியேறும் போதெல்லாம் பர்தா(ஹிஜாப்) ஆடைகளில் தங்களை முழுமையாக மறைத்து வெளியாவதுடன், இது தங்களின் ஹஜ் ஏற்றுக்கொள்ளப் படுவதற்குமுரிய பிரதான காரணிகளுள் ஒன்றென்பதையும் மனதிற்கொள்ள வேண்டும். இவ்வொழுக்கம் மக்காவில் மாத்திரமல்ல, பொதுவாக ஒரு பெண் பூமியின் எப்பகுதியிலிருந்தாலும் கட்டாயம் கடைப்பிடித் தொழுக வேண்டியதொன்றாகும்.

துல்ஹஜ் மாதத்தின் எட்டாம் நாளையடைந்ததும் நீங்கள் ஹஜ்ஜுடைய அமல்களுக்காகத் தயாராக வேண்டும். அன்றைய தினம் நீங்கள் தங்கியிருக்குமிடத்திலிருந்தே ஹஜ்ஜுக்காக இஹ்ராமுடைய ஆடைகளையணிந்து நிய்யத் வைத்துக் கொள்ள வேண்டும். முதலில் மினாவுக்குச் சென்று அன்றிரவு அங்கேயே தங்க வேண்டும். மறுநாள் (ஒன்பதாம் நாள்) காலை மினாவிலிருந்து புறப்பட்டு அரபாவைச் சென்றடைந்து மஃரிபானதும் முஸ்தலிபாவிற்குச் சென்று அன்றிரவு அங்கே தங்க வேண்டும். மறுதினம்(பத்ததாம் நாள்) சுபஹுக்குப் பின்னர் முஸ்தலி பாவிலிருந்து புறப்பட்டு மீண்டும் மினாவுக்கு வர வேண்டும். இங்கு ஜம்ரதுல் அகபாவி (பெரிய ஷைதானி)ற்கு கல்லெறிந்து, தலைமுடியையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீக்கிக் கொள்ள வேண்டும். இன்றைய தினம் மாத்திரம் சூரியன் நடு உச்சியிலிருந்து மேற்கு நோக்கி சாய்வதற்கு முன்னரும் கல்லெறியலாம். இதன் பின் இன்றைய தினம் இஹ்ராமின் உடைகளைக் களைந்து சாதாரண உடைகளையணிந்து கொள்ளலாம். இன்றைய தினமும், தொடர்ந்து வரும் 11,12,13, ஆகிய தினங்களிலும் மினாவில் தங்கியிருந்து 11,12,13, ஆகிய நாட்களில் மூன்று ஜம்ராக் (ஷைதான்) களுக்கும் கல்லெறிய வேண்டும். இம்மூன்று நாட்களிலும் லுஹருக்குப் பின்னர் மஃரிபுக்கு முன்னர் முதலாவது, முதலில் தென்படும் ஜம்ராவுக்கும், இரண்டாவது அதற்கடுத்து வரும் ஜம்ராவுக்கும், மூன்றாவது அதனையடுத்த ஜம்ராவுக்கும் கல்லெறிய வேண்டும்.

12ஆம் நாள் கல்லெறிந்த பின் மஃரிபுக்கு முன் மினாவிலிருந்து புறப்பட்டு மக்காவுக்குச் செல்லவும் முடியும். எனினும், ரஸுல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் 13ஆம் தினமும் கல்லெறிந்து விட்டுத் தான் மினாவிலிருந்து புறப்பட்டார்கள். என்பதும் கவனிக்கற்பாலது. இதன் பின் மக்காவுக்குச் சென்று தவாபுல் இபாழாவையும்,அதனைத் தொடர்ந்து ஸஃயையும் நிறைவேற்ற வேண்டும். இத்துடன் ஹஜ்ஜின் கிரியைகள் முற்றுப் பெற்றுவிடும்.

மாதவிடாய் ஏற்பட்டுள்ள மாதர்கள் மதீனாவுக்குப் போக முன் துப்பரவாகி விடும் என்றிருந்தால் அது வரை தவாபையும், ஸஃயையும் பிற்படுத்த முடியும். அல்லது குறுகிய காலம் மாதாந்த ருதுவை நிறுத்தக் கூடிய மருந்தை உபயோகித்து தவாபை முடித்துக் கொள்ளலாம்.

இது வரை ஹாஜிகள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க மாண்புகள், ஹஜ், உம்ரா ஆகியவற்றின் நடைமுறைகள் பற்றிய விளக்கங்களைப் பெற்ற நாம் ஹஜ், உம்ரா ஆகியவற்றின் விதிமுறைகள் பற்றி இனி ஆராய்வோம்.

# ஹஜ் கடமை (வாஜிப்)

## ஆவதற்குரிய நிபந்தனை (ஷர்த்)கள்:-

1. முஸ்லிமாக இருத்தல்.
2. பருவமடைந்தவராக இருத்தல்.
3. சித்த சுவாதீனமுள்ளவராக இருத்தல்.
4. அடிமையாயில்லாமல் இருத்தல்
5. பிரயாணம் மேற்கொள்வதற்குரிய சரீரசுக முள்ள வராயிருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. தனது பொறுப்பிலுள்ளவர்களைத் தாபரிப்பதற்கும்,தனது பயணத்திற்கும் போதிய பணமுள்ளவராயிருத்தல்.
7. பிரயாணம் செய்யும் வேளையில் வழியில் பயம் இல்லாதிருத்தல் இந்நிபந்தனைகள் ஆண்கள், பெண்கள் அனைவருக்கும் பொதுவானவை.பெண்களுக்கு மேலும் இரு நிபந்தனைகள் உள்ளன.

1. தன்னுடன் தனக்கு நிரந்தரமாக மணமுடிக்க தடை செய்யப்பட்ட (மஹ்ரமான) ஒருவர் அல்லது நம்பிக்கைக்குரிய இரு பெண்கள் பயணத்திலிருத்தல்.
2. இத்தா அனுஷ்டிக்காத வராயிருத்தல்.

## ஹஜ்ஜின் பர்ழுகள்.

1. நிய்யத்து வைத்தல்
2. அரபாவில் தரித்தல்
3. க.்.பதுல்லாஹ்வைச் சுற்றி வலம் வருதல் (தவாப்)
4. ஸபா,மர்வாவுக்கிடையில் தொங்கோட்டம ஓடுதல்(ஸ.்.ய்)
5. தலைமுடியை நீக்குதல்(ஹல்க்).

## ஹஜ்ஜின் வாஜிபுகள்.

1. ஹஜ்ஜுக்குரிய காலத்தில் எல்லை (மீகாத்)யில் நிய்யத் வைத்தல்
2. துல்ஹஜ் மாதத்தின் 11,12,13,ஆம் தினங்களில் (அய்யாமுத்தஷ்ரீக்) மூன்று ஜம்ராக்களிலும் கல்லெறிதல்.
3. பிறை பத்து நடுநிசியின் பின்னர் முஸ்தலிபாவில் தரித்தல்.
4. பத்தாம் நாள் சூரியன் உதித்த பின்னர் ஜம்ரதுல் அகபாவில் கல்லெறிதல்.
5. தவாபுல் வதா.். செய்தல்.

இனி ஹஜ்ஜின் பர்ழுகள், வாஜிப்களைப் பற்றி சற்று விரிவாக நோக்குவோம்.

### ஹஜ்ஜின் பர்ழுகளின் விபரம்.

(1). **இஹ்ராமின் ஆடைகளை அணிந்து நிய்யத்து வைத்தல்.**
இதற்கு நான்கு முறைகள் உள்ளன. அல்இப்ராத், அத்தமத்து.். அல்கிரான்,அல்இத்லாக்.இவற்றுள் தனக்கு விருப்பமான முறை ஒன்றைத்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தழுவி நிய்யத் வைத்துக் கொள்ள முடியும். ஷவ்வால், துல்க.. தாஹ் மாதங்களிலும், துல்ஹிஜ்ஜஹ மாதம் பிறை ஒன்பது வரையும் நிய்யத் வைக்கலாம். ஏனைய மாதங்களில் நிய்யத் வைக்க முடியாது.

## அல் இப்ராத.

ஹஜ்ஜை நிறைவேற்றுபவர் தனக்குரிய மீகாத்தில் ஹஜ்ஜை மாத்திரம் கருதி நிய்யத் வைத்தல். இதன் பின் மக்காவுக்குச் சென்று ஹஜ்ஜின் கிரியைகள் அனைத்தையும் முடித்துக்கொண்டு மக்காவுக்கு வெளியே தன்ஈம்( ஆயிஷாப் பள்ளி) அல்லது ஜி..ரானஹ் எனுமிடத்துக்கு (ஹில்லுக்கு ) வந்து உம்ராவுக்கு நிய்யத் வைத்தல். பிறகு மீண்டும் மக்காவினுள் நுழைந்து தவாப், ஸ..ய், ஹல்க் போன்ற உம்ராவின் அமல்களை முடிக்க வேண்டும்

## அத்தமத்து..

ஹஜ்ஜை நிறைவேற்றுபவர் தனக்குரிய மீக்காத்திலிருந்து உம்ராவை மாத்திரம் நிய்யத் வைத்து மக்காவுக்குச் சென்றதும் உம்ராவைப் பூர்த்தி செய்ய வேண்டும். பின்னர் மக்காவிலிருந்தே ஹஜ்ஜுக்காக நிய்யத் வைத்து ஹஜ்ஜுடைய கிரியைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். இம்முறையைத்தழுவிச் செய்யும் போது ஓர் ஆடு குர்பான் கொடுப்பது அவசியமாகும்.

## அல்கிரான்.

ஹஜ்,உம்ரா இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து நிய்யத் வைத்தல். ஹஜ்ஜுடைய அமல்களில் உம்ராவின் அமலக்ளும் அடங்கியிருப்பதால் அவ்விரண்டுக்கும் ஒரு தவாபும், ஒரு ஸ..யும், ஒரு ஹல்கும் செய்தால் போதும். இப்படிச்செய்யும் போதும் ஓர் ஆடு குர்பான் கொடுப்பது அவசியமாகும்.

## அல் இத்லாக்

தனியாக ஹஜ்ஜையோ,உம்ராவையோ அல்லது ஹஜ்,உம்ரா இரண்டையும் சேர்த்தோ நிய்யத் வைக்காமல் பொதுவாக வணக்கத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்திரம் நிய்யத் வைத்தல். இப்படிச் செய்வது ஹஜ் மாதத்திலாயின் ஹஜ், உம்ரா இரண்டையும் நிறைவேற்றலாம் ஹஜ் அல்லாத காலத்தில் இம்முறைப்படி நிய்யத் வைத்தால் உம்ராவை மாத்திரமே நிறைவேற்ற முடியும்.

இம்முறைகளில் ஒன்றைத் தழுவி நிய்யத் வைப்பதன் மூலம் ஒருவர் ஹஜ்,உம்ராவுடைய கடமைகளில் சம்பந்தப்பட்டு விடுகின்றார். இதனைத் தொடர்ந்து அதிகமாகத் தல்பியாவைச் சொல்வது ஸுன்னத் ஆகும். இதன் பின் தூழ்ந்த,தைத்த ஆடைகளை அணிதல கூடாது. எனினும்,பாதரட்சை,வார் ஆகியவற்றை அணிந்து கொள்ளலாம். ஆண்கள் தலையை மறைத்தலும்,பெண்கள் முகத்தை மறைத்தலும் கூடாது.

இஹ்ராம் ஆடைகளையணிந்த பின் மேனியிலோ, ஆடையிலோ வாசனைப் பூசுதல், தலைமுடி, தாடி ஆகியவை களுக்கு எண்ணை பூசுதல், உடம்பின் எந்தப் பாகத்திலி ருந்தாவது முடிகளை நீக்குதல், நகம் வெட்டுதல்,முடி பிடுங்குண்டு வரும் என்று சந்தேகிப்பவர்கள் தலைமுடியையோ அல்லது தாடியையோ வாருதல், காமசுகம் அனுபவித்தல், வேட்டையாடுதல் ஆகிய விடயங்களும் தடுக்கப் பட்டது.(ஹராம்) ஆகும்.

## (2). அரபாவில் தரித்தல்.

ஹஜ் என்பது அரபாவே என்று நபி(ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்கள் கூறி, இங்கு தரிப்பதின் முக்கியத்தவம் பற்றி விளக்கியுள்ளார்கள். துல்ஹஜ் மாதத்தின் ஒன்பதாம் நாள் சூரியன் உச்சியிலிருந்து மேற்கு நோக்கி சாய்ந்தது முதல் அடுத்த நாள் ஸுப்ஹுடைய ஆரம்ப நேரம் வரையுள்ள காலப்பகுதியில் அரபாவின் எல்லைக்குள் ஒரு பகுதியில் சற்று தாமதித்தல் போதுமானது.

# (3). கஃபதுல்லாஹ்வைச் சுற்றி வலம் வருதல் (தவாப்)

## தவாபின் வாஜிப்கள்.

1. அவ்ரத்தை மறைத்திருக்க வேண்டும். ஆண் தொப்புள் முதல் முழங்கால் வரையுள்ள பகுதியையும்,பெண் முகம் தவிர்ந்த ஏனைய பகுதிகளையும் மறைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. சிறுதுடக்கு,பெருந்துடக்கு ஆகியவற்றிலிருந்து துப்பரவாகயிருத்தல். தவாப் செய்து கொண்டிருக்கும் போது வுழூ.'.முறிந்து விட்டால் மீண்டும் வுழூ.'. செய்து கொண்டு விட்ட இடத்திலிருந்தே தொடர வேண்டும்.

3. க.'.பதுல்லாஹ்வை தனது இடது பக்கத் திசைக்கு ஆக்குவதுடன், அல்ஹஜருல் அஸ்வதிலிருந்து ஆரம்பித்தல்.

4. ஏழு தடவைகள் வலம் வரல். எண்ணிக்கையில் சந்தேகம் ஏற்பட்டால் குறைந்த எண்ணிக்கையை எடுத்துக் கொள்ள வேண்டும்.

## தவாபின் ஸுன்னத்கள்.

1. நடந்து தவாப் செய்தல்.

2. ஒவ்வொரு சுற்றின் ஆரம்பத்திலும் அல்ஹஜருல் அஸ்வதை நெற்றியினால் முத்தமிடல், கிடைக்கா விட்டால் கையினால் அதன் திசைக்கு சமிக்ஞை செய்து அக்கையை முத்தமிடல், இவ்வாறே அர்ருக்னுல்யமானிய்யை கையைக்காட்டி முத்தமிடல்.

3. தவாபின் ஆரம்பத்தில் அதற்குரிய துஆவை ஓதல்.பின்னர் கதவுக்கு முன்னால் நின்று அதற்குரிய துஆவை ஓதுதல். பின்னர் இரு அர்ருக்னுல் யமானிகளுக்குமிடையில் அதற்குரிய துஆவை ஓதல்.

4. முதல் மூன்று சுற்றுக்களிலும் சற்று விரைவாக ஓடுதல் இது பெண்களுக்கு ஸுன்னத் அல்ல. இம்மூன்று சுற்றுகளிலும் அதற்குரிய துஆவை ஓதல்.

5. ஒவ்வொரு சுற்றையும் தொடர்ச்சியாகச் செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. தவாப் செய்து முடிந்த பின் இரு ரக்அத்கள் ஸுன்னத் தொழுதல். இது தவாபினுடைய ஸுன்னத் தொழுகை என அழைக்கப்படுகிறது. முதல் ரக்அதில் அல்காபிரூன் ஸூராவையும், இரண்டாம் ரக்அத்தில் அல் இக்லாஸ் ஸூராவையும் ஓதுவது ஸுன்னத் ஆகும்.

7. இத் தொழுகையின் பின் அல்ஹஜருல் அஸ்வதுக்கு கையைக்காட்டி அக்கையை முத்தமிடல்.

(4). ஸபா-மர்வாவுக்கிடையில் தொங்கோட்டம் ஓடுதல் (ஸஃய்).

## ஸஃயின் நிபந்தனை (ஷர்த்)கள்:-

1. ஸபாவிலிருந்து ஆரம்பித்தல்.
2. ஏழு தடவைகள் ஓடுதல்.ஸபாவிலிந்து மர்வாவுக்குச் செல்லுதல் ஒரு தடவை. பிறகு மர்வாவிலிருந்து ஸபாவுக்குத் திரும்பி வருதல் இன்னொருதடவையாகும்.
3. தவாபின் பின் ஸஃய் செய்தல்.

## ஸஃயின் ஸுன்னத்கள்:-

1. ஸபா,மர்வா ஆகிய இரு குன்றுகளிலும் தனது உயரத்தின் அளவுக்கு ஏறுதல், இவ்வாறு ஏறின் அதற்குரிய துஆவை ஓதல்.

2. இயற்கையான நடையில் ஸஃய் செய்தல், ஒவ்வொரு தடவையின் நடுவிலும் பச்சை நிற மின் விளக்குகள் இரண்டிற்கும் இடைப்பட்ட பகுதியில் சற்று வேகமாக செல்லுதல்.(இது பெண்களுக்கு ஸுன்னத் அல்ல).

## 5. தலைமுடியை நீக்குதல் (ஹல்க்),

ஆண்கள் தலை முடியை முற்றாக நீக்குதல் சிறப்பாகும், குறைந்ததுமூன்று முடிகளை நீக்கிக்கொண்டாலும் போது மானதே, பெண்கள் மூன்று முடிகளை நீக்கிக் கொள்வது போதுமாகும். தலையில் அறவே முடியில்லாதோர் கத்தியை தலை மீது இலேசாகப்படுத்துவது ஸுன்னத் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாஜிப்களின் விபரம்

(1) ஹஜ்ஜுக்குரிய காலத்தில் எல்லை (மீகாத்)யில் நிய்யத் வைத்தல். மக்காவில் குடியிருப்பவர்கள் தவிர்ந்த உலகின் ஏனைய பகுதிகளில் வாழக்கூடிய மக்களுக்கு ரஸுல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஹஜ்ஜுக்காக நிய்யத் வைக்க வேண்டிய இடங்களை வரையறுத்துத் தந்துள்ளார்கள். இலங்கையிலிருந்து செல்வோருக்கு யலம்லம் எனும் இடமாகும். ஹாஜிகள் இஹ்ராம் ஆடைகளை வீடுகளிலிருந்தே அணிந்து கொண்டு சென்றாலும் விமானத்தில் சென்று கொண்டிருக்கும் வேளை யலம்லம எனுமிடத் தாண்ட நேரிடும்போது அதுபற்றிய அறிவுறுத்தல் வழங்கப்படும். அவ்விடத்தில் நிய்யத் வைத்துக் கொள்ள வேண்டும்

(2) துல்ஹஜ் மாதத்தின் 11,12,13ஆம் தினங்களில் (அய்யாமுத்தஷ்ரீக்) 3 ஜம்ராக்களில் கல் எறிதல். துல்ஹஜ் மாதத்தின் 11,12,13ஆகிய தினங்களில் மினாவில் தங்கி ஒவ்வொரு தினமும் சூரியன நடு உச்சியிலிருந்து மேற்குநோக்கி சாய்ந்ததன் பின் அன்றையதினம் சூரியன் மறைவதற்குமுன் இடைப்பட்டவேளையில் இதனைச்செய்ய வேண்டும். முதலாவது அல்ஜம்ரதுல் ஊலா, பின்னர் அல்ஜம்ரதுல் வுஸ்தா, பிறகு ஜம்ரதுல் அகபா என்ற ஒழுங்கு முறையை(தர்தீப்) பேணி ஒவ்வொரு ஜம்ராவுக்கும் ஏழுபொடிக்கற்களை எறியவேண்டும். ஏழையும் ஒவ்வொன்றாக எறிய வேண்டும் இரண்டாம் நாள் எறிந்து விட்டு சூரியன் மறைவதற்கு முன் மினாவிலிருந்து வெளியேறி விட்டால், மூன்றாம் நாள் எறிய வேண்டிய அவசியமில்லை. எனினும், நபி (ஸல்ல்லலாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மூன்று தினங்களும் கல்லெறிந்து விட்டே மினாவிலிருந்து புறப்பட்டார்கள்.

(3) பிறை பத்து நடுநிசியின் பின்னர் முஸ்தலிபாவில் தரித்தல். துல் ஹஜ் மாதம் பத்தாம் இரவு நடுநிசியின் பின்னர் ஸுப்ஹு நேரம் வரை முஸ்தலிபாவில் தரித்தல். ஸுப்ஹு தொழுத பின்னரே இங்கிருந்து கற்களைப் பொறுக்கிக்கொண்டு மினாவுக்குச்செல்ல வேண்டும்.

(4) பத்தாம் நாள் சூரியன் உதித்த பின்னர் ஜம்ரதுல் அகபாவில் கல்லெறிதல்.துல்ஹஜ் மாதத்தின் பத்தாம் நாள் மினாவில் ஜம்ரதுல் அகபாவில் ஏழுகற்கள் எறிதல். இத்தினத்தில் மாத்திரம் சூரியன்நடு உச்சியிலிருந்து மேற்குநோக்கி சாய்வதற்கு முன்னரும் எறியலாம். ஒவ்வொரு கல்லை எறியும் போதும் அல்லாஹு அக்பர் எனச் சொல்வது ஸுன்னத் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. தவாபுல் வதா.'. செய்தல்.

ஹாஜிகள் மக்காவிலிருந்து புறப்படும் வேளை இந்த தவாபை செய்ய வேண்டும்.அத்தவாபை நிறைவேற்றிய பின் பிரயாணம் சார்ந்த நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டால் மீண்டுமொருமுறை இதனைச் செய்யவேண்டும்.

## ஹஜ்ஜின் முக்கிய ஸுன்னத்கள்.

1. நிய்யத் வைப்பதற்கு முன்னரும், மக்காவில் நுழைவதற்கு முன்னரும், அரபா, முஸ்தலிபா ஆகிய இடங்களில் தங்குவதற்காகவும், ஜம்ராக்களில் கல்லெறிவதற்காகவும் குளித்தல்.
2. நிய்யத் வைக்குமுன் உடம்பில் மாத்திரம் வாசனை பூசுதல்.
3. இஹ்ராம் ஆடைகளை அணிந்து நியத்துவைக்கமுன் இரண்டு ரக்அத் ஸுன்னத் தொழுதல்.
4. நிய்யத்தை வாயால் மொழிதல்.
5. தல்பியா ஓதல்.
6. தவாபின் பின் இரண்டு ரக்அத் ஸுன்னத் தொழுதல்.

## ஹஜ்ஜின் பர்ழுகளுக்கும் வாஜிப்களுக்குமிடையில் உள்ள வேறுபாடு:-

ஹஜ்ஜின் பர்ழுகளில் ஒன்று விடுபட்டால அதனைடுசெய்வதற்குஅந்த பர்ழை நிறைவேற்றுவதைத் தவிர வேறு எதுவும்செய்யமுடியாது. ஆனால் வாஜிப்களிலொன்று விடுபட்டால் குர்பான் கொடுப்பதன் மூலம் அந்த வாஜிபை ஈடு செய்துகொள்ள முடியும். ஹஜ்,உம்ராவின் 'விதிமுறைகள், ஹாஜிகளகடைப்பிடிக்கவேண்டியஒழுக்கங்கள் பற்றி சுருக்கமாகவே இந்நூலிலவிளக்கியுள்ளோம்விரிவான விளக்கம் தேவைப்படுவோர் சீரிய கற்றறிந்த ஆலிம்களையணுகுமாறுஅன்பாக வேண்டிக் கொள்கின்றோம். மேண்மைமிக்க இவ்வணக்கங்களின்உன்னத நோக்கங்களைப் புரிந்து, விதிமுறைகளைப் பேணி அவற்றை நிறைவேற்ற வல்லவன் அல்லாஹ் எம் அனைவருக்கும் அருள்புரிவானாக!. நாம் செய்யும் அனைத்து அமல்களுக்கும் பூரணமான நன்மைகளைத் தந்தருள் வானாக! ஆமீன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பான வேண்டுகோள்!

இந்நூல் கடந்த 26.02.1995 அன்று காலஞ்சென்ற- மாவில்மடையைப் பிறப்பிடமாகக்கொண்ட H.L.அப்துல் லதீப் அவர்களினதும், 26.02.1999 அன்று காலஞ்சென்ற அன்னாறின் அன்பு மனைவி ஸைனப் அவர்களினதும் நினைவாக அவர்களின் பிள்ளைகளால் வெளியிடப்படுகிறது.

யா அல்லாஹ் !

அவ்விருவரின் மறுமை வாழ்க்கையை சகல பாக்கியங்களும் கொண்டதாக ஆக்கியருள்வாயாக!

ஆமீன்.

இந்நூலைப் படிப்போர் தமது துஆக்களில் எனது பெற்றோரையும் சேர்த்துக்கொள்ளுமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

AUTO PRINTS AKURANA 08-300279

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org